செய்தி வெளியீடு– 174 நாள்.7.3.2008

## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தி

மகளிர் சமுதாய முன்னேற்றத்தை வலியுறுத்திடும் உலக மகளிர் நாள் விழா இன்று (8.3.2008) மிகுந்த மகிழ்ச்சியுடனும், எழுச்சியுடனும் நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

அமெரிக்க நாட்டில் நியூயார்க் நகரில் நெசவாலைகளில் பணிபுரிந்த மகளிர் பலர் திரண்டு தங்கள் ஊதிய உயர்வு, எட்டுமணி நேர வேலை முதலியவற்றை வலியுறுத்திக் கிளர்ந்தெழுந்து போராடத் தொடங்கிய நாள், 1857ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 8ஆம் நாள்! பின்னர் அந்நாளே உலக மகளிர் நாளாக ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு, மகளிர் மேம்பாடு குறித்த விழிப்புணர்வை வளர்த்திடப் பெரிதும் பயன்படுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் அறிவுறுத்திய சமத்துவ, சமதர்மக் கொள்கைகளின்படி, பெண்கள் சமுதாயம் ஆண்களுக்கிணையாக முன்னேற்றம் காண்பதற்குக் கல்வியறிவு பெற்று, வேலைவாய்ப்புகள் எய்தி, பொருளாதாரத் தன்னிறைவு பெறவேண்டும் என்பதற்காகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தியாவின் இதர மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டிடும் வகையில்,

1973இல் காவல் பணியில் மகளிர் நியமனத் திட்டம்;

1989 இல் மகளிர் மேம்பாட்டுத் திட்டம்;

10ஆம் வகுப்புவரை படித்த ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 1989இல் 5 ஆயிரம் ரூபாயும், 1996இல் 10 ஆயிரம் ரூபாயும் வழங்கி, 2006இல் 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்;

**1989இல் ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்; 2007இல் இத்திட்டம் முதுகலைப் பட்டப்படிப்பு வரை நீட்டிப்பு;**

**1990இல் அரசு வேலைவாய்ப்புகளில் மகளிர்க்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம்;**

**அதே ஆண்டில் பரம்பரைச் சொத்தில் பெண்களுக்குச் சமஉரிமை அளித்திடும் தனிச் சட்டம்;**

**1996இல் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம்;**

**2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் ஏழை, எளிய தாய்மார்கள் மனம் மகிழ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்;**

**எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம்;**

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஏழைக் கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம்**

**—எனப் பல்வேறு திட்டங்களைப் புதிதுபுதிதாக உருவாக்கி நடைமுறைப்படுத்தியுள்ளதன் மூலம் பெண்கள் சமுதாயம் தொடர்ந்து முன்னேறி வருகிறது.**

**பெண்கள் மேலும் ஏற்றம் பெறும்வகையில் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்க வகை செய்திட மத்திய அரசு வலியுறுத்தப்பட்டு வருகிறது.**

**இந்நிலையில் கொண்டாடப்படும் இந்த ஆண்டின் உலக மகளிர் நாள் விழா தமிழகம் முழுவதும் மிகுந்த எழுச்சியுடன் நிகழ்ந்திடவும், தமிழக மகளிர் அனைவரும் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் முன்னேற்றம் எய்திடவும் இந்நன்னாளில் என் உளமார வாழ்த்துகிறேன்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு, சென்னை—9